### தீமோத்தேயு 1 6:7-8

ஏனெனில், உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை; இங் கிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோக வுங் கூடாது என்பதற்குச் சந்தேக மில்லை. (யோப். 1:21; சங்கப். 5:14.) ஆகையால் அன்னமும் ஆடையும் இருந்தால், இதுவே நமக்குப் போதுமென்று இருக்கக்கடவோம். (பழ. 27:26, 27.)

### சங்கப் பிரசங்கியாகமம் 5:10

ஆஸ்தி மிகுமளவில் அதை உண்பவர்களும் மிகுதியாம். அதை உடையவனோ தன் கண்களினாலே திரவியங்களைக் காண்பதல்லாதே அவனுக்கு வேறென்ன பயன்?

### அர்ச். மத்தேயு சுவிசேஷம் 6:19-20

பூலோகத்தில் உங்களுக்குப் பொக் கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம். இங்கே அந்தும் துருவும் அரிக்கின்றது, திருடருங் கன்னமிட்டுத் திருடுகிறார்கள். ௲ 19. பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டாம்:- என்பதினால் இலௌகீக பொருட்களின்மேல் மிதமிஞ்சின பற்றுதல் விலக்கப்பட்டிருக்கிறது. (21-ம் வசனம் காண்க.) எனெனில் மிதமிஞ்சின பற்றுதலால் இருதயஞ் சர்வேசுரனை மறந்து இந்த உலக வாழ்வை மாத்திரம் அபேட்சிக்கும். ஆனால் பரலோகத்தில் உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள். அங்கே அந்தும்துருவும் அரிக்கிறதுமில்லை. திருடர் அங்கே கன்னமிட்டுத் திருடுகி றதுமில்லை , (லூக். 12:33; 1 தீமோ . 6:19.)

### எபிரேயருக்கு எழுதிய நிருபம் 13:5

உங்கள் ஒழுக்கம் பேராசையின்றி, உள்ளது போதுமென்று இருக்கட்டும். நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவரே சொல்லி யிருக்கிறார். (ஷேஜாசு. 1:5.)

### அர்ச். மாற்கு சுவிசேஷம் 8:36

மனிதனானவன் உலகமெல்லாம் ஆதாயமாக்கிக்கொண்டாலும், தன் ஆத்துமத்தைச் சேதப்படுத்துவானாகில் அவனுக்குப் பிரயோஷஜனமென்ன?

### அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 12:15

பின்பு அவர் அவர்களைப் பார்த்து திருவுளம்பற்றினதாவது: எவ்வித பொருளாசையின் மட்டிலும் எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்குள்ள ஆஸ்தியின் பெருக்கத்தில் அவனுடைய உயிர் நிற்கிறதில்லை என்றார்.

கொரிந்தியர் 2 4:18

நாங்கள் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளையே நோக்கிக்கொண்டிருக்கிறோம். ஏனெனில் காணப்படுகிறவைகள் அநித்தியமானவை; காணப்படாதவை களோ நித்தியமானவை.

தீமோத்தேயு 1 6:9

ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும், பசாசின் கண்ணியிலும், கேட்டிலும், நரகாக் கினியிலும் மனிதர்களை அமிழ்த்துகிற வீணும் கெடுதியுமான பற்பல இச்சைகளிலும் விழுகிறார்கள்.

பழமொழியாகமம் 15:16

தேவ பயத்துடன் கூடிய சொற் பப் பொருள் திருப்தியைத் தராத மிகு பொக்கிஷங்களையும் விட அதிக நலமாம்.

பழமொழியாகமம் 16:16

பொன்னைவிட உத்தமமா யிருக்கிற ஞானத்தைக் கொண்டிரு; வெள்ளியிலும் விலையுயர்ந்ததாய் இருக்கிற விவேகத்தை அடைந்து கொள்.

சங்கப் பிரசங்கியாகமம் 5:15

இது மிகப் பிரலாபத்துக்குரிய விஷயமன்றோ? அவன் வந்த பிரகா ரமே திரும்பிப்போவான்; அவன் இப்படி விருதாவில் உழைத்ததினால் அவனுக்குப் பலனென்ன காணும்?

தீமோத்தேயு 1 6:17

இப்பிரபஞ்சத்தில் ஐசுவரியராய் இருக்கிறவர்கள் ஆங்கார சிந்தை யுள்ளவர்களாய் இராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை வைக்காமலும், நாம் அநுபவிப்பதற்கு வேண்டிய யாவையும் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஷஜீவனுள்ள சர்வேசுரன் பேரில் நம்பிக்கையாயிருக்கவும், (லூக். 12:21.)

கொலோசியர் 3:5

ஆகையால் உங்களுடைய இலௌகீக அவயவங்களைச் சாகடியுங்கள். அவையாவன: விபசாரம், அசுத்தம், காமம், துர் இச்சை, விக்கிரக ஆராதனையாகிய பொருளாசை. ௴௴ 5. விக்கிரகங்களுக்கு அடிமைத்தனமாகிற பொருளாசை என்பதற்கு எபேசியர் 5-ம் அதிகாரம் 5-ம் வசனம் காண்க.

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 19:21

சேசுநாதர் அவனை நோக்கி: நீ உத்தமனாயிருக்க விரும்பினால், போய், உனக்குள்ளவைகளை விற்றுத் தரித்திரருக்குக்கொடு; அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷ முண்டாயிருக்கும். பின்னும் வந்து என்னைப் பின்செல் என்றார்.

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 6:21

ஏனெனில் உன் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கேயே உன் இருதயமும் இருக்கின்றது. (லூக். 12:34.)

தீமோத்தேயு 1 6:6

(உள்ளது) போதுமென்ற எண் ணத்தோடுகூடிய பக்தியே மிகுந்த ஆதாயம்.

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 16:26

மெய்யாகவே மனிதன் உலகமெல்லாம் ஆதாயமாக்கிக்கொண்டா லும், தன் ஆத்துமம் சேதப்பட்டால் அவனுக்குப் பிரயோசனமென்ன? அல்லது தன் ஆத்துமத்துக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?

தீமோத்தேயு 1 2:9-10

அப்படியே ஸ்திரீகளும் யோக்கியமான ஆடையணிந்து, நாணத்தையும் இச்சையடக்கத்தையும் ஆபரணமாகப் பூண்டு, சடை பின்னாமலும், பொன்னினாலாவது முத்துக்களினாலாவது விலையேறப்பெற்ற வஸ்திரங்களினாலாவது தங்களை அலங்கரியாமலும், ( 1 இரா. 3:3.) தேவ பக்தியை முன்னிட்டு நடக்கிற பெண்பிள்ளைகளுக்கு யோக்கியமான விதமாய் நற்கிரியைகளால் தங்களை அலங்கரிக்கக்கடவார்கள்.

பழமொழியாகமம் 30:8

வியர்த்தத்தையும் அபத்தச் சொற்களையும் என்னைவிட்டுத் தூர மாகச் செய்யும்; வறுமையையாவது ஐசுவரியத்தையாவது எனக்குக் கட்டளையிடாமல் என் சீவனத்துக்கு அவசரமானதைமட்டும் எனக்குக் கொடும்.

பழமொழியாகமம் 22:1

நற்கீர்த்தி அளவற்ற திரவியத் தைக் காட்டிலும் அதிக நல்லதாம்; நன்றாய்ப் பதிக்கப்படுவது வெள்ளி

யையும், பொன்னையும் விட மேலானதாம் (சர்வ. 7:2).

பழமொழியாகமம் 23:5

நீ அடையக்கூடாத ஆஸ்தியின் பேரில் உன் கண்களை ஏறெடுக் காதே; ஏனெனில், அவை கழுகு களைப் போல் தங்களுக்குச் சிறகு களை உண்டாக்கிக்கொண்டு ஆகா யத்தில் பறந்துவிடும்.

பழமொழியாகமம் 11:4

(சர்வேசுரன்) பழிவாங்கும் நாளில் செல்வம் பயன்படாது; நீதியோவெனில் மரணத்தினின்று விடுவிக்கும்.

பழமொழியாகமம் 21:26

அவன் நாள் முழுவதும் இச் சித்து ஆசிக்கிறான்; ஆனால் நீதிமானா யிருக்கிறவன் கொடுப்பான்; ஓயாமல் கொடுப்பான்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 4:32

விசுவாசிகளுடைய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே ஆத்துமமுமாய் இருந்ததுமன்றி, அவர் களில் ஒருவனும் தனக்குள்ளவை களில் எதையும் தன்னுடையதென்று சொல்லவில்லை. சகலமும் அவர்களுக் குப் பொதுவாயிருந்தது.

பழமொழியாகமம் 18:11

ஐசுவரியவானின் பொருள் அவனுடைய பலத்தின் நகரியும், அவனைச் சுற்றிலுமுள்ள பலமான மதிலும்போலாம்.